KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: **10.63300/kijts603112026.52**

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

நெய்தல் திணைப் பொருளியலும் பெண்களின் உழைப்பும்: சங்க இலக்கியம் மற்றும் ‘தலைச்சுமடுகாரி’ புதினம் மையப் பகுப்பாய்வு

The Economy and Women's Labour in the Neithal Landscape: A Focused Analysis of Sangam Literature and the Novel Thalaichumadukaari

ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ்[1,*iD], முனைவர். ஜா.ஞா. ஜோணி ஜெபமலர்[2]

[1] முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவெண் : 2511309011001, தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629174.

[2] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர் தமிழாய்வு மையம், முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629174.

***Corresponding author:** ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ், antonyvergin@gmail.com

ORCID iD: ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ் https://orcid.org/0009-0003-6532-2764

ARTICLE INFO

Article history
Received: 25 October 2026
Revised: 28 October 2026
Accepted: 10 November 2026

Article ID
KIJTS-2026-0028

Peer review
Double-blind peer review

Keywords
Neithal Landscape
Economy
Fish Trade
Salt Trade
Thalaichumadukaari
Women's Labour.

ABSTRACT

The economic life of the people of the Neithal landscape during the Sangam period was based on the sea and its related resources. Sangam literature clearly describes their occupations and ways of life. Women, along with men, were involved in occupations such as drying fish, selling fish, and salt trade. In particular, women's contribution to fish sales and the barter system was significant. This study examines how women's labour and commercial activities, which held importance during the Sangam period, have changed over time. For this purpose, the novel Thalaichumadukaari, written by Kurumpanai C. Berlin and published in 2021, has been selected for the study. The novel portrays the lives of the coastal fishing communities of Kanyakumari District and the labour and livelihood struggles of fisherwomen who carry fish on their heads for sale. By comparing and analysing Sangam literary poems with the events presented in the novel, this study aims to highlight the changes in the trading practices of Neithal women from the Sangam period to the modern era and their continuous contribution to family economics.

How to cite this article: ஜா. வெர்ஜின் ஆன்றணி ஜார்ஜ், & முனைவர். ஜா.ஞா. ஜோணி ஜெபமலர் (2026). நெய்தல் திணைப் பொருளியலும் பெண்களின் உழைப்பும்: சங்க இலக்கியம் மற்றும் ‘தலைச்சுமடுகாரி’ புதினம் மையப் பகுப்பாய்வு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 614–624. https://doi.org/10.63300/kijts603112026.52

Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சங்ககால நெய்தல் திணை மக்களின் பொருளாதார வாழ்க்கை கடலையும் கடல் சார்ந்த வளங்களையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சங்க இலக்கியங்கள் அவர்களின் தொழில்களையும் வாழ்வியல் முறைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. மீன் உலர்த்துதல், மீன் விற்பனை, உப்பு வணிகம் போன்ற தொழில்களில் ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, மீன் விற்பனை மற்றும் பண்டமாற்று முறையில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்துள்ளது. இவ்வாறு சங்ககாலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த பெண்களின் உழைப்பும் வணிகப் பணிகளும் காலப்போக்கில் எவ்வாறு மாறியுள்ளன என்பதை இவ்வாய்வு ஆராய்கிறது. இதற்காக, குறும்பனை சி. பெர்லின் எழுதி 2021ஆம் ஆண்டு வெளியான 'தலைச்சுமடுகாரி' புதினம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. இப்புதினம் குமரி மாவட்டக் கடலோர மீனவ மக்களின் வாழ்க்கையையும், தலையில் மீன் சுமந்து விற்பனை செய்யும் மீனவப் பெண்களின் உழைப்பையும் வாழ்வாதாரப் போராட்டங்களையும் எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியப் பாடல்களையும் புதினத்தில் இடம்பெறும் நிகழ்வுகளையும் ஒப்பிட்டு ஆராய்வதன் மூலம், சங்ககாலம் முதல் நவீன காலம் வரை நெய்தல் நிலப் பெண்களின் வணிக முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், குடும்பப் பொருளாதாரத்தில் அவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பையும் வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்: நெய்தல் திணை, பொருளியல், மீன் வணிகம், உப்பு வணிகம், தலைச்சுமடுகாரி, பெண்களின் உழைப்பு.

1. முன்னுரை

தமிழகத்தின் திணைக் கோட்பாடு நிலத்தையும் அங்கு வாழும் மக்களின் வாழ்வியலையும் அடிப்படையாகக் கொண்டது. கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் திணையாகும். இங்கு வாழ்ந்த பரதவர், நுளையர், அளவர் ஆகியோர் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், வணிகம் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். ஆண்கள் மீன்பிடித்தலில் ஈடுபட்ட நிலையில், பெண்கள் மீன் உலர்த்துதல், விற்பனை செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டனர். இப்பெண்களின் உழைப்பும் வணிகப் பங்களிப்பும் இன்றளவும் தொடர்வதை 2021ஆம் ஆண்டு வெளிவந்த குறும்பனை சி. பெர்லினின் 'தலைச்சுமடுகாரி' புதினம் எடுத்துக்காட்டுகிறது.

மீன்பிடித் தொழில் செய்து வாழும் ஜார்ஜ் புற்றுநோயால் உயிரிழக்க, அவரது மனைவி செசீலி நான்கு பிள்ளைகளையும் வளர்க்கும் பொறுப்பை ஏற்று, தலையில் மீன் சுமந்து விற்கும் தலைச்சுமடுகாரியாக மாறுகிறார். அவரது உழைப்பையும் வாழ்வியல் போராட்டங்களையும் கன்னியாகுமரி மாவட்ட நெய்தல் வட்டார வழக்குமொழியில் இப்புதினம் எடுத்துரைக்கிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு, சங்ககாலம்

முதல் நவீன காலம் வரை நெய்தல் நிலப் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் தொடர்ச்சியையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

1.1 ஆய்வுச் சிக்கல்

சங்க இலக்கியங்கள் நெய்தல் திணைச் சமூகத்தில் மீன்பிடித்தல், மீன் உலர்த்துதல், உப்பு வணிகம் போன்ற தொழில்களில் பெண்களின் ஈடுபாட்டைப் பதிவு செய்துள்ளன. எனினும், நவீன காலச் சூழலில் கடலோரப் பொருளாதார மாற்றங்கள், போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் குடும்பச் சுமையைத் தாங்கும் மீனவப் பெண்களின் வாழ்வியல் போராட்டங்கள் எத்தகைய பரிணாமங்களைப் பெற்றுள்ளன என்ற கேள்வி எழுகிறது. சங்ககாலத்தில் பண்டமாற்று முறையில் நிகழ்ந்த மீன் வணிகம், இன்று நவீன பணப் பரிவர்த்தனை மற்றும் பேருந்துப் பயணம் சார்ந்த சவால்களாக உருவெடுத்துள்ள நிலையில், சங்ககாலப் பெண்பொருளாதார உழைப்புக்கும் நவீன புதினத்தில் சித்தரிக்கப்படும் பெண்களின் உழைப்புக்கும் இடையே நிலவும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் முரண்பாடுகளையும் கண்டறிவது இவ்ஆய்வின் சிக்கலாக அமைகிறது.

1.2 ஆய்வு நோக்கங்கள்

1. சங்க இலக்கியப் பாடல்களின் அடிப்படையில் சங்ககால நெய்தல் நிலப் பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பு, மீன் பதப்படுத்துதல் மற்றும் உப்பு வணிகம் ஆகியவற்றை ஆராய்தல்.
2. குறும்பனை சி. பெர்லினின் ‘தலைச்சுமடுகாரி’ புதினத்தின் வழியாக நவீன குமரி மாவட்டக் கடலோரச் சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் போராட்டங்கள் மற்றும் மீன் வணிக முறைகளைப் பதிவு செய்தல்.
3. சங்ககால நெய்தல் நிலப் பெண்களின் உழைப்புக்கும் நவீன காலத் தலைச்சுமடுகாரி களின் உழைப்புக்கும் இடையேயான ஒற்றுமை மற்றும் மாற்றங்களை ஒப்பீட்டு முறையில் வெளிப்படுத்துதல்.

1.3 ஆய்வு முறை

இவ்வாய்வு **ஒப்பீட்டு ஆய்வு முறை** மற்றும் **விளக்கப் பகுப்பாய்வு முறை** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சங்க இலக்கிய நூல்களான நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை மற்றும் குறும்பனை சி. பெர்லினின் *தலைச்சுமடுகாரி* புதினம் ஆகியவை முதன்மை மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கடலோர வரலாறு, நெய்தல் சொல்லகராதி, தமிழர் பொருளியல் மற்றும் பண்பாடு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் துணை மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

2. சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலப் பொருளியல்

சங்ககாலத்தில் நெய்தல் நில மக்களான பரதவரும் நுளையரும் மீன்பிடிப்பதற்குப் புணை, திமில், அம்பி, தோணி போன்ற மரக்கலங்களைப் பயன்படுத்தினர். நா. சி. கந்தையா பிள்ளை திமிலைக் கட்டுமரம் எனக் குறிப்பிடுகிறார்.[1] தேனி மாவட்டம் காமயகவுண்டன்பட்டியில் கண்டறியப்பட்ட சுமார் மூவாயிரம் ஆண்டுகள் பழமையான பாறை ஓவியத்தில் கட்டுமரத்தை ஒத்த உருவம் காணப்படுவது, அதன் தொன்மையை உணர்த்துகிறது.[2] நெய்தல் நிலப் பரதவர்கள் திமிலில் சென்று மீன்பிடித்த செய்தியை நற்றிணைப் பாடல் எடுத்துரைக்கிறது.

"**திண் திமில் பரதவர் ஒண் சுடர்க் கொளீஇ,**
நடு நாள் வேட்டம் போகி, வைகறைக் ...
கடல் மீன் தந்து, கானற் Fit,,"(நற் – 388: 4–6)

இப்பாடலில், பரதவர்கள் இரவு நேரத்தில் ஒளிதரும் விளக்குகளை ஏந்திக்கொண்டு திமிலில் கடலுக்குச் சென்று மீன்பிடித்து, விடியற்காலையில் கரைக்குத் திரும்பி மீன்களைக் குவிக்கும் செய்தி குறிப்பிடப்படுகிறது. இதன்மூலம் சங்ககாலப் பரதவர்களின் கடல்சார் மீன்பிடித் தொழில்நுட்பத்தையும் அவர்களின் பொருளாதார வாழ்வியலையும் அறியமுடிகிறது.

3. சங்ககால மீன் வணிகத்தில் பெண்கள்

சங்ககால நெய்தல் நிலப் பொருளாதாரத்தில் பெண்களும் முக்கியப் பங்கு வகித்தனர். ஆண்கள் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வந்த நிலையில், பெண்கள் அந்த மீன்களை விற்பனை செய்வதிலும், அவற்றுக்குப் பதிலாகத் தேவையான பிற பொருள்களைப் பெற்றுக்கொள்வதிலும் ஈடுபட்டனர். இதற்குச் சான்றாக அகநானூற்றுப் பாடல் அமைந்துள்ளது.

"ஓங்குதிரைப் பரப்பின் வாங்குவிசைக் கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழைஅணி அல்குல் செல்வத் தங்கையர்
விழவுஅயர் மறுகின் விலைஎனப் பகரும்"(அகம். 320:1–4)

இப்பாடல், கடலுக்குச் சென்று மீன்பிடித்து வந்த பரதவர்களின் மீன்களை அவர்களது தங்கையர் விழாக்கள் நடைபெறும் தெருக்களில் கொண்டு சென்று விலை கூறி விற்பனை செய்தமையை எடுத்துரைக்கிறது. இதன் மூலம் சங்ககாலத்திலேயே மீன் விற்பனையில் பெண்கள் ஈடுபட்டிருந்ததையும், குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்காற்றியதையும் அறிய முடிகிறது.

3.1. சங்ககால மீன் உலர்த்தலில் பெண்கள்

சங்ககால நெய்தல் நிலப் பெண்கள் மீன் விற்பனை செய்வதோடு மட்டுமல்லாமல், மீன்களை அறுத்து உலர்த்திப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டிருந்தனர். இதற்குச் சான்றாக நற்றிணையில் இடம்பெறும் இரு பாடல்கள் அமைந்துள்ளன.

“**நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி,**
இனப்புள் ஒப்பும் எமக்கு நலன் எவனோ?” (நற். 45:6–7)

“கணம் கொள் குப்பை உணங்கு திறன் நோக்கி,
புன்னை அம் கொழு நிழல் முன் உய்த்துப் பரப்பும்” (நற். 101:3–4)

இப்பாடல்கள் நெய்தல் நிலப் பெண்கள் மீன்களை உலர்த்தும் பணியில் ஈடுபட்டிருந்ததை உணர்த்துகின்றன. குறிப்பாக, சுறா மீனை அறுத்து உலர்த்துவதும், மீன்களை உலர்த்துவதற்கு ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து முறையாகப் பரப்பி வைப்பதும் அவர்களின் அன்றாடப் பணிகளாக இருந்துள்ளன. மீன்களை உலர்த்திப் பாதுகாப்பதன் மூலம் அவற்றை நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தவும் விற்பனை செய்யவும் முடிந்தது. இதிலிருந்து மீன் பதப்படுத்தும் தொழிலில் பெண்களுக்கு இருந்த அனுபவமும், நெய்தல் நிலப் பொருளாதாரத்தில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பும் தெளிவாகின்றன.

3.2. நெய்தல் நிலப் பெண்களின் உப்பு வணிகம்

‘உப்பில்லா பண்டம் குப்பையிலே’ என்பது தமிழர் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் பழமொழியாகும். பழந்தமிழர் வாழ்வில் உப்பு சுவையின் அடையாளமாகவும், வளத்தின் குறியீடாகவும் கருதப்பட்டது. உப்பு என்ற சொல்லுக்குச் ‘சுவை’ என்பதே முதற்பொருள். இனிப்பு, கசப்பு, துவர்ப்பு போன்ற சுவைகளின் பெயர்களும் உப்பு என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை எனத் தொ. பரமசிவன் குறிப்பிடுகிறார்.[4] சங்ககால நெய்தல் நிலப் பெண்கள் உப்பு வணிகத்தில் ஈடுபட்டிருந்த செய்தியைக் குறுந்தொகையின் 269ஆம் பாடல் எடுத்துரைக்கிறது.

“வயச் சுறா எறிந்த புண் தணிந்து எந்தையும்
நீல் நிறப் பெருங் கடல் புக்கனன்; யாயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்பு விளை கழனிச் சென்றனள்.”(குறுந். 269:3–6)

இப்பாடலில், சுறாமீன் தாக்கியதால் ஏற்பட்ட காயம் ஆறியதும் தலைவியின் தந்தை மீண்டும் கடலுக்குச் சென்று மீன்பிடிக்கிறான். அதேவேளையில், அவளது தாய் உப்பைக் கொடுத்து அதற்குப் பதிலாக வெண்ணெல்லைப் பெறுவதற்காக உப்பளத்திற்குச் செல்கிறாள். இதனை, ‘உப்பை மாறி வெண்ணெல் தரீஇய’ என்ற பாடலடி உணர்த்துகிறது. இதன்மூலம், சங்ககால நெய்தல் நிலப் பெண்கள் உப்பு வணிகத்திலும் பண்டமாற்று முறையிலும் ஈடுபட்டிருந்ததை அறியமுடிகிறது.

4. ‘தலைச்சுமடுகாரி’ புதினத்தில் நெய்தல் நிலப் பொருளியல்

தலைச்சுமடுகாரி புதினம், இன்றைய நெய்தல் நில மக்களின் வாழ்க்கையையும் அவர்களது தொழில் முறைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

“மிக்கேலடிமைக்கு ஒரே ஒரு ஒத்தனா மரம்தான் ஒத்த சொத்தா இருந்தது. அந்த ஒரு மரத்த வச்சிட்டுதான் பாய் ஏற்றி தொலைதூரக் கடலில் போய் ‘தூட்டா’ போட்டு மீன்பிடிப்பது...” (தலைச்சுமடுகாரி, ப. 37)

இப்பகுதியில், கடலோடி ஆண்கள் ஒத்தனா மரம் (கட்டுமரம்), வள்ளம் போன்றவற்றைப் பயன்படுத்திக் கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் செய்திகள் இடம்பெறுகின்றன. ஒத்தனா மரம் என்பது ஒருவர் மட்டும் தொழில் செய்யும் கட்டுமரம் என்கிறது நெய்தல் சொல்லகராதி.[5]மேலும், தாத்துவலை, கச்சாவலை, சாளாவலை போன்ற மீன்பிடி வலைகளையும் அவர்கள் பயன்படுத்துவதை மிக்கேலடிமையின் வாழ்க்கை வழியாக புதினம் பதிவு செய்கிறது.

4.1. மீன் ஏலமும் கூட்டமைப்பும்

கடலிலிருந்து கரையேற்றப்படும் மீன்களை ஏலமிடுவதும், அவற்றைச் சந்தைக்குக் கொண்டு செல்ல ஏலத்தில் வாங்குவதும் தற்கால நெய்தல் நிலப் பொருளியலின் முக்கியக் கூறுகளாகும்.

“ஒரு புள்ளி செம்மீனை ஏலம் கேட்டு வாங்கி அதைச் சரியாக இரண்டு பங்காகப் பிரித்து செசீலியின் மீன் சருவத்தில் ஒரு பங்கைக் கொடுத்து சந்தையைப் பார்க்க வேகமாக ஓடினார்கள்.”

(தலைச்சுமடுகாரி, ப. 96)

இதன்மூலம் கடலிலிருந்து பிடித்து வரும் மீங்களை ஏலத்தில் வாங்குவதும் அதை தங்களுக்குள் பங்கிட்டுகொள்வதுமான இன்றைய நெய்தல் நில நடைமுறையை பதிவு செய்கிறது ‘தலைச்சுமடுகாரி’ புதினம்

4.2. தலைச்சுமடு என்னும் உழைப்பு வடிவம்

சங்ககாலத்தில் நெய்தல் நிலப் பெண்கள் மீன்களை எடுத்துச் சென்று விற்பனை செய்தனர். அந்த வணிக மரபு இன்றும் வேறுபட்ட வடிவத்தில் தொடர்வதை தலைச்சுமடுகாரி புதினம் எடுத்துக்காட்டுகிறது. இந்நாவலில் பெண்கள் சுமார் அறுபது கிலோ எடையுள்ள மீன் சருவத்தைத் தலையில் சுமந்துகொண்டு, வெறுங்காலில் நீண்ட தூரம் நடந்து சென்று விற்பனை செய்கின்றனர். இதனை,

“**அலுமினியத்தால் செய்யப்பட்ட மீன் சருவம்... பாதியாகக் கீறிய காட்டன் சாரி சும்மாடு... பாரச்சுமையைத் தலையில் ஏற்றி அதைத் தாங்கும் அளவிற்கு அவள் கழுத்து பழக்கப்படவில்லை. உயிரே போனது போல் வலி...**”(தலைச்சுமடுகாரி, பக். 91, 96)

என்ற புதினப் பகுதி உணர்த்துகிறது. மீன் விற்பனைக்காகப் பெண்கள் மேற்கொள்ளும் கடினமான உடல் உழைப்பையும் அதனால் ஏற்படும் வலியையும் இப்பகுதி வெளிப்படுத்துகிறது.

4.3. பேருந்துப் பயணமும் சமூகப் புறக்கணிப்பும்

மீன் விற்பனைக்காகப் பேருந்தில் செல்லும் பெண்கள், தங்களுடன் மீன் சருவத்தைக் கொண்டு செல்வதால் பல்வேறு சிரமங்களைச் சந்திக்கின்றனர். சக பயணிகளும் பேருந்து நடத்துநரும் அவர்களை அவமதித்துப் பேசுவதையும், பேருந்தில் மீன் சருவம் சறுக்கி விழும்போது வசைமொழிகளுக்கு ஆளாவதையும் தலைச்சுமடுகாரி புதினம் எடுத்துக்காட்டுகிறது. இதனை,

"வண்டியில எடமில்ல... மீன் சருவத்த ஏத்தாதேண்ணு சொல்லுதேன்... பஸ்சுக்குள் சருவம் சறுக்கி விழ... தாலி அறுத்த மட்ட! ஒனக்க கண்ண சாமானத்துலயா வச்சிருக்க..."(தலைச்சுமடுகாரி, பக். 98, 100)

என்ற புதினப் பகுதி வெளிப்படுத்துகிறது. மீன் விற்பனைக்காகப் பேருந்தில் பயணம் செய்யும் பெண்கள் பொது சமூகத்தில் எதிர்கொள்ளும் அவமதிப்புகளையும் புறக்கணிப்புகளையும் இப்பகுதி காட்டுகிறது. இத்தகைய இன்னல்களைப் பொருட்படுத்தாமல், தனது குழந்தைகளின் உணவுத் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து மீன் விற்பனையில் ஈடுபடும் செசீலி, நெய்தல் நிலப் பெண்களின் உழைப்பையும் மன உறுதியையும் வெளிப்படுத்தும் மாந்தராகத் திகழ்கிறாள்.

சங்ககாலத்தில் மீன் விற்பனையில் ஈடுபட்ட பெண்கள் சமூகத்தில் மதிப்புடன் நடத்தப்பட்டனர் என்பதை இலக்கியச் சான்றுகள் உணர்த்துகின்றன. "**மாட்சியின் பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**" (புறநானூறு – பாடல் 192:12) என்னும் சமத்துவச் சிந்தனையைப் போற்றிய தமிழ்ச் சமூகத்தில், நவீன காலத்தில் தொழிலின் அடிப்படையில் மீன் விற்பனை செய்யும் பெண்கள் அவமதிக்கப்படுவதும் புறக்கணிக்கப்படுவதும் வருந்தத்தக்கதாகும்.

4.4. பண்டமாற்றும் பணப் பரிவர்த்தனையும்

சங்ககாலத்தில் நெய்தல் நில மக்கள் மீன், உப்பு போன்றவற்றைப் பண்டமாற்று முறையில் கொடுத்து நெல்லையும் பிற தானியங்களையும் பெற்றனர். இதனை அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கிறது.

"நெல்லின் நேரே வெண் கல் உப்பு"(அகம். 140: 7)

இப்பாடலடிகள் உப்பு வணிகத்தையும் பண்டமாற்று முறையையும் சுட்டுகின்றன. இம்முறை நவீன காலத்தில் பணப் பரிவர்த்தனையாக மாறியுள்ளது. தலைச்சுமடுகாரி புதினத்தில் செசீலி மீன் விற்பனை மூலம் கிடைக்கும் பணத்தில் குழந்தைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களை வாங்குகிறாள். இதன்மூலம் வணிக முறை மாறினாலும், குடும்பத்தின் உணவுத் தேவையை நிறைவேற்றுவதில் பெண்களின் பங்களிப்பு தொடர்வதை அறியமுடிகிறது.

5. மீன் வணிகத்தில் பெண்களின் பங்களிப்பு: சங்ககாலம் முதல் நவீனகாலம் வரை

சங்க இலக்கியங்களில் காணப்படும் நெய்தல் நிலப் பெண்களின் வணிகப் பங்களிப்பிற்கும், 'தலைச்சுமடுகாரி' புதினத்தில் இடம்பெறும் பெண்களின் வணிகப் பங்களிப்பிற்கும் இடையே வரலாற்றுத் தொடர்ச்சி காணப்படுகிறது. இதனைப் பின்வரும் ஒப்பீடு விளக்குகிறது.

ஒப்பீட்டுக் கூறுகள்	**சங்க இலக்கிய நெய்தல் நிலம்**	**'தலைச்சுமடுகாரி' புதினம்**
மீன்பிடி நீர் மிதவைகள்	அம்பி, திமில், புணை, தோணி.	கட்டுமரம், வள்ளம்,படகு
மீன்பிடிக் கருவிகள்	வலை, தூண்டில், எறியுளி.	தாத்து வலை, கச்சா வலை, சாளை வலை
வணிகத்தில் ஈடுபடும் பெண்கள்	பரதவ மகளிர், பாண்மகள்	மீனவப் பெண்கள்
கொண்டு செல்லும் முறை	நடந்து செல்லுதல் மாட்டுவண்டி	மீன் சருவத்தைத் தலைச்சுமையாகச் சுமந்து செல்லுதல், பேருந்து பயணம்
பயன்பாட்டுக் கருவிகள்	வணிகக் கருவிகள்	அலுமினிய மீன் சருவம், காட்டன் சும்மாடு
பொருளாதாரப் பங்களிப்பு	குடும்ப உணவுத் தேவையை நிறைவேற்றுதல்	குடும்பப் பராமரிப்பு, கடன், குழந்தைகளின் கல்விச் செலவு
வணிக முறை	மீன் விற்பனை, பண்டமாற்று	மீன் ஏலத்தில் வாங்குதல், சுமந்து செல்லுதல், சந்தையில் விற்பனை செய்தல்

சங்ககாலம் முதல் இன்றுவரை நெய்தல் நிலப் பெண்களின் மீன் வணிகப் பங்களிப்பு தொடர்வதை இவ்வொப்பீடு உணர்த்துகிறது. பண்டமாற்று முறை, வணிகக் கருவிகள் ஆகியவை மாறியபோதும் நெய்தல் பொருளாதாரத்தில் பெண்களின் உழைப்பும் பொறுப்பும் தொடர்வதை தலைச்சுமடுகாரி புதினம் வெளிப்படுத்துகிறது.

6. முடிவுரை

சங்க இலக்கியம் முதல் தலைச்சுமடுகாரி புதினம் வரை நெய்தல் நிலப் பெண்களின் மீன் வணிகப் பங்களிப்பு தொடர்வதை இவ்வாய்வு உணர்த்துகிறது. பண்டமாற்று முறை பணப் பரிவர்த்தனையாகவும், வணிக முறைகள் மாறியபோதும் குடும்பப் பொருளாதாரத்தில் பெண்களின் உழைப்பும் பங்களிப்பும் தொடர்ந்து வருவதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. நா. சி. கந்தையா பிள்ளை, கலித்தொகை வசனம், சென்னை: ஒற்றுமை நிலையம், 1941, ப. 198.

2. ந. அதியமான், பா. ஜெயக்குமார் (பதிப்பாசிரியர்கள்), தமிழகக் கடல்சார் வரலாறு: அண்மைக்கால ஆய்வுகள், தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், 2006, ப. 3.

3. அனவரத விநாயகம் பிள்ளை, பழமொழி அகராதி, மதராஸ்: ரிப்பன் அச்சியந்திரசாலை, 1912, ப. 81.

4. தொ. பரமசிவன், அறியப்படாத தமிழகம், ஐந்தாம் பதிப்பு, நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், 2013, ப. 26.

5. குறும்பனை சி. பெர்லின், நெய்தல் சொல்லகராதி, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், 2020, ப. 43.

துணைநூல் பட்டியல் References:

1. அகநானூறு (மூலமும் உரையும்), உரை: புலியூர்க் கேசிகன், சென்னை: பாரி நிலையம், 2012.

2. ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), உரை: ஔவை துரைசாமிப் பிள்ளை, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2008.

3. குறுந்தொகை (மூலமும் உரையும்), உரை: பொ. வே. சோமசுந்தரனார், சென்னை: கழக வெளியீடு, 2005.

4. நற்றிணை (மூலமும் உரையும்), உரை: ஔவை துரைசாமிப் பிள்ளை, சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2008.

5. குறும்பனை சி. பெர்லின், தலைச்சுமடுகாரி, சென்னை: வாசகசாலை பதிப்பகம், ஜனவரி 2021.